# சமூக வலுவூட்டல் வேலை திட்டத்தினை கிராம உத்தியோகத்தர் பிரிவு வட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்கள் 2025.

## 1. இலக்கு குழு.

2025 ஆம் ஆண்டின் பொருட்டு அஸ்வெசும சமூக நன்மைகளைப் பெறுகின்ற பயனாளிகள் மற்றும் நிவாரணம் உதவி பெற்ற (தற்போது அஸ்வெசும சமூக நன்மைகளைப் பெறாத) குறைந்த வருமானம் பெறும் 4 லட்சம் குடும்பங்களை வலுவூட்டுவது கீழுள்ள பிரகாரம் இலக்கிடப்படுகின்றது

| பயனாளிக் குடும்பத் தொகுதி | சமூக நன்மைகள் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்படும் வீதம் | தெரிவு செய்யப்படும் இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| i. "அஸ்வெசும" சமூக பயனாளி குடும்பங்கள் | | |
| ➢ தற்காலிக நெருக்கடிக்குள்ளான மற்றும் பாதிப்புக்குள்ளான பயனாளி குடும்பங்கள் | 60% | 180.000 |
| ➢ வறிய குடும்பங்கள் | 25% | 75,000 |
| ➢ மிக வறிய குடும்பங்கள் | 12% | 45,000 |
| **உப மொத்தம்** | **100%** | **300,000** |
| ii. சமுர்த்தி நிவாரண உதவி வேலை திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் (தற்போது "அஸ்வெசும" நன்மைகள் கிடைக்கப் பெறாத) | - | 100,000 |
| **மொத்தம்** | - | **400,000** |

## 2. களத்துறை (கிராம உத்தியோகத்தர் பிரிவு)சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இலக்கு.

2.1 களத்திலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரால் வலுவூட்டும் பொருட்டு ஒவ்வொரு பயனாளிகள் தொகுதிகளில் இருந்து கீழுள்ள பிரகாரம் 50 குடும்பங்களை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

| பயனாளிகள் தொகுதி | கள உத்தியோகத்தர் ஒருவரால் ஒவ்வொரு பயனாளி தொகுதியில் இருந்தும் தெரிவு செய்து கொள்ள வேண்டிய குடும்பங்களில் எண்ணிக்கை |
|---|---|
| 1. அஸ்வெசும பயனாளிக் குடும்பத் தொகுதி. | |
| • தற்காலிக நெருக்கடிக்குள்ளான மற்றும் பாதிப்புக்குஉள்ளான பயனாளிக் குடும்பங்கள் | 23 |
| • வறிய பயனாளிக் குடும்பங்கள் | 10 |
| • மிக வறிய பயனாளிக் குடும்பங்கள் | 05 |
| **உப மொத்தம்** | 38 |
| 2. **குறைந்த வருமானம் பெறும் குடும்பத் தொகுதி** (சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பங்கள்) | 12 |
| **மொத்தம்** | 50 |

**2.2 நிரந்தரமான மற்றும் பதில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொருட்டு இணைப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு இலக்கினை வழங்குதல்.**

01. ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாத்திரம் நிரந்தரமான பணியினை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு 50 குடும்பங்கள் இலக்காக கிடைக்கின்றது.

02. பதிலாக பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவராயின் தனது நிரந்தர பிரிவு மற்றும் பதில் கடமையாற்றும் பிரிவுகளின் மொத்த இலக்கானது 75 குடும்பங்களை வலுவூட்டுதல் வேண்டும். அக்குடும்பங்களை தெரிவு செய்வது சகல பிரிவுகளும் பிரதிநிதித்துவம் செய்கின்றன பிரகாரம் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

03. பதிலாள் கொடுப்பனவினைப் பெறாது ஒரு உத்தியோகத்தர் பிரிவொன்றில்/பிரிவுகளில் பதில் கடமையாற்றுகின்ற போது நிரந்தர மற்றும் பதிலாக பணிபுரியும் பிரிவுகள் சகலதிலும் மொத்தமாக 50 குடும்பங்களை வலுவூட்டுதல் வேண்டும். அக் குடும்பங்களை தெரிவு செய்து கொள்வதிலும் சகல பிரிவுகளும் பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரகாரம் மேற்கொள்ளப் படல் வேண்டும். மேலும் அவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 50 இலக்கு குடும்பங்களுக்கு மேலதிகமாக தனது விருப்பத்தின் பிரகாரம் மேலதிக குடும்பங்களின் எண்ணிக்கையினை தெரிவு செய்து வலுவூட்டவும் முடியும்.

04. உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரமான பிரிவில் மாத்திரம் பணியை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் "அஸ்வெசும" சமூக நன்மைகளைப் பெறும் மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கையானது 38 அல்லது அதனை விட குறைவடைகின்ற சந்தர்ப்பத்தில், அப்பயனாளிகளிலிருந்து ஆகக்கூடிய பொருத்தமான அளவு குடும்பங்களை வலுவூட்டுவதற்கு தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.இவ்வாறான பிரிவுகளில் பொருத்தமான

குடும்பங்களை தெரிவு செய்வது தொடர்பில் குறித்த வங்கி முகாமையாளர் கூடுதலான கவனத்தினை செலுத்துதல் வேண்டும்.

05. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி நிதி உதவி வேலைத் திட்டத்தின் கீழ் உட்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இருப்பின் இத் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலக்குகள் அப் பிரிவிற்கு உரியதல்ல என்பதனை அறியத்தருகின்றேன். தற்போது வேலை திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இலக்குகள் அவர்களது இலக்குகளாகும். இருப்பினும் இந்த முன்னோடி வேலை திட்டத்தை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர் ஒருவர் பிரிதொரு பிரிவொன்றில் பதில் கடமையாற்றுபவராயின், அப்பிரிவு/பிரிவுகளில் ஆகக் குறைந்தது 25 குடும்பங்களை வலுவூட்டுதல் வேண்டும்.

06. முன்னோடி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பிரிவுகள் தவிர்ந்த ஏனைய சகல பிரிவுகளிலும் குறைந்த வருமானம் பெறும் (சமுர்த்தி நிவாரணம் பெற்ற) 12 குடும்பங்களை வலுவட்டுவதற்கு தெரிவு செய்வது கட்டாயமானதாகும்.

### 2.3 பிரதேச செயலக பிரிவொன்றில் அஸ்வெசும பயனாளி இலக்குக் குடும்பங்களை கணக்கீடு செய்தல்.

i. வலுவூட்டல் வேலைத்திட்டத்தில் தேசிய இலக்கு "அஸ்வெசும" நன்மைகளைப் பெறும் குடும்பங்கள் 03 இலட்சமாகும். அதன் பிரகாரம் களத்தில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு 38 அஸ்வெசும குடும்ப இலக்கொன்று வழங்கப்பட்டுள்ளது. (விசேட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த)

ii. பிரதேச செயலக பிரிவில் அஸ்வெசும குடும்ப இலக்கானது அப்பிரிவின் கடமைகளில் ஈடுபடுகின்ற களம் பணியாற்றுகின்ற சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (கிராம உத்தியோகத்தர் பிரிவில் இணைக்கப்பட்டுள்ள) எண்ணிக்கையில் அஸ்வசும இலக்கு குடும்பங்கள் 38 ஐ பெருக்குவதன் ஊடாக கிடைக்கின்ற பெறுமதியாகும்.

iii. ஏதேனும் ஒரு பிரதேச செயலக பிரிவொன்றில் உத்தியோகத்தர்களுக்கு கிடைக்க பெற்றுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை அப்பிரிவின் இலக்கிடப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையை விட குறைந்த சந்தர்ப்பத்தில் அந்த குறைவான அக்குடும்பங்களின் எண்ணிக்கையினை அஸ்வெசும நன்மைகளை பெறும் பயனாளிகள் அதிகமாக உள்ள பிரிவுகளுக்கு இடையே வகுத்து வழங்குதல் வேண்டும். வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் முன்னோடி வேலை திட்டம் செயற்படுத்தப்படும் பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக இலக்கு குடும்பங்களை வழங்கலாகாது.

உதாரணம்:-கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் உள்ள அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கையானது 40 ஆகும். இவ்வேலைத்திட்டத்தின் மூலம் மேற்சொன்ன பிரிவிற்கு 38 குடும்பங்களுக்கான இலக்குகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரிவிலிருந்து தெரிவு செய்து கொள்ளக் கூடிய பொருத்தமான குடும்பங்களின் எண்ணிக்கை 30 ஆகும் வலுவூட்டும் பொருட்டு மேலும் 08 குடும்பங்களை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். (38-30=08குடும்பங்கள்) இந்த 08 இலக்குக் குடும்பங்களை பிறிதொரு தகுதியான பிரிவொன்றின் பொருட்டு இலக்காக வழங்குதல் வேண்டும்.

iv. இந்த இலக்கினை தயாரிப்பது பிரதேச செயலாளரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் அடிப்படையில் வங்கிச் சங்க முகாமையாளர் / தலைமைப் பீட முகாமையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

v. மேலும் சமுர்த்தி நிவாரணத்தினைா் பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு வழங்கப்பட்டுள்ள இலக்குகளையும் மேற்படி ஆலோசனைகளின் பிரகாரம் கணக்கீடு செய்து ஏதேனும் இலக்கு குடும்பங்களில் குறைபாடுகள் இருப்பின் பிற பிரிவுகளுக்கு இடையே வகுத்து வழங்குவதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

## 03. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் குடும்பங்களை இனங்காணுதல்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் "அஸ்வெசும" சமூக நன்மைக் குழுக்களுக்கு சொந்தமான 80 பயனாளிகளின் பெயர்கள் உள்ளடங்கிய பெயர் பட்டியல் ஒன்றினை தயாரித்து பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

| நன்மைகள் தொகுதி | நலன்புரி நன்மைகள் சபை பட்டியலுக்கமைய பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற பயனாளிகளின் பெயர்களின் எண்ணிக்கை | பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தரால் தெரிவு செய்து கொள்ள வேண்டிய ஆகக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1."**அஸ்வெசும" பயனாளி குடும்பத் தொகுதி** | | |
| • பாதிப்புக்கு உள்ளான மற்றும் நெருக்கடிக்குள்ளான குடும்பங்கள் | 48 | 23 |
| • வறிய பயனாளிக் குடும்பங்கள் | 21 | 10 |
| • மிக வறிய பயனாளிக் குடும்பங்கள் | 11 | 05 |
| **உப மொத்தம்** | **80** | **38** |
| 2. குறைந்த வருமானம் பெறும் குடும்பத் தொகுதி (சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பங்கள்) | - | 12 |
| **மொத்தம்** | **80** | **50** |

i. அஸ்வெசும நன்மைகளைப் பெறும் 80 குடும்பங்களின் பெயர் பட்டியலை தயாரிக்கும் போது ஒவ்வொரு குடும்பத்தின் பொருட்டும் நலன்புரி நன்மைகள் சபையினால் வழங்கப்பட்டுள்ள வறுமை வீதத்தினை (Poverty Rank) கவனத்திற் கொண்டு திணைக்களத்தினால் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதனைக் குறிப்பிடுகின்றேன்.

ii. பிரிவு மட்டத்திற்கு தலைமை காரியாலயத்தால் வழங்கப்படுகின்ற பெயர் பட்டியலின் பிரகாரம் அந்தந்த தொகுதியின் கீழ் அட்டவணையின் 1ஆம் இலக்கத்தில் இருந்து கீழ்நோக்கியதாக தனித் தனியாக 38 குடும்பங்களை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

iii. மேற்படி பெயர் பட்டியலில் உள்ளடங்கியுள்ள பயனாளிகளிடத்தேயே இருந்து பொருத்தமான குடும்பங்களைத் தெரிவு செய்யும்போது கீழே பந்தியிலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எடுகோள்களுக்கு இசைய தெரிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

iv. ''அஸ்வெசும'' கிடைக்கப் பெறாத சமுர்த்தி நிவாரணத்தினைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து பொருத்தமான 12 குடும்பங்களை கீழுள்ள உத்தியோகத்தர்களை கொண்ட கிராமியக் குழுவின் மூலம் இனங்காணுதல் வேண்டும். இங்கு 2022/2023 ஆண்டுகளில் சமுர்த்தி நிவாரணத்தினைப் பெற்ற பயனாளிகளிலிருந்து குடும்பங்களை தெரிவு செய்வது பொருத்தமானதாகும்.

<u>**கிராமியக் குழு**</u>

- கிராம உத்தியோகத்தர்
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்

(இதன் பொருட்டு பொருத்தமான குடும்பங்களை தெரிவு செய்யும்போது கீழே பதி இலக்கம் 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள எடுகோள்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்)

## 04. வலுவூட்டலின் பொருட்டு பொருத்தமான குடும்பங்கள இனங்காணும் எடுகோள்கள்.

கீழே இலக்கம் I, ii மற்றும் எடுகோள்கள் உட்பட்ட ஏனைய எடுகோள் 1 அல்லது பலவற்றினை பூர்த்தி செய்யும் குடும்பங்களை வலுவூட்டலின் பொருட்டு தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

i. தெரிவு செய்யப்படும் குடும்பம் ஒன்றின் அங்கத்தவர்களுக்கிடையே வயது 16 இற்கும் 60 இற்குமிடைப்பட்ட (திறமையான) ஒருவரோ அல்லது பலரோ இருத்தல் வேண்டும்.

ii. பயனாளிகளை வலுவூட்டும் வேலை திட்டத்தில் இணைவதற்கு விருப்பத்தினை தெரிவித்தல் வேண்டும்.

iii. ''அஸ்வெசும'' பயனாளிக் குடும்பங்களை தெரிவு செய்யும்போது தற்போது ''அஸ்வெசும'' நன்மைகளைப் பெறுகின்ற ஒருவராக இருத்தல் (வழங்கப்பட்டுள்ள அட்டவணையில் பெயர் இருத்தல்)

iv. ஏற்கனவே ஏதேனும் ஒரு சுய தொழில் ஒன்றில்/ வருமானமீட்டும் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபடுகின்ற ஒருவர் அல்லது குடும்பம் ஒன்றாக இருத்தல்.

v. வருமானமீட்டும் பணி ஒன்றில் ஈடுபடும் குடும்பம் ஒன்றின் ஈடுபடுத்தக்கூடிய அல்லது ஈடுபடுத்த முடியாத குடும்பம் ஒன்றாயின் அவ்வாறான குடும்பம் ஒன்றின் வயது 18 இற்கும் 24 இடைப்பட்ட வயதினையுடைய அங்கத்தவர் ஒருவர், தொழில் பயிற்சி ஒன்றின் பின்னர் சுய தொழில் ஒன்றில் உள்ளூர்/வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஒன்றில் ஈடுபடுத்தக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.

vi. பயிற்சி / திறமை / ஆற்றல் உள்ள ஆட்கள் உள்ள குடும்பம் ஒன்றில் எவரேனும் ஒரு நபர் அவர் வருமானம் ஈட்டும் பணி ஒன்றில் புதிதாக ஈடுபடுத்தக்கூடிய ஆற்றல் இருத்தல்.

### 05. வலுவூட்டப்படுகின்ற துறைகளையும் வேலைத் திட்டங்களையும் இனம் காணுதல்.

வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார, சமூக மற்றும் உளவியல் ரீதியான துறைகளின் கீழ் வலுவூட்டப்படுவதுடன் அதன் பிரகாரம் கீழுள்ள பிரதான 05 துறைகள் உள்ளடங்குகின்ற பிரகாரம் வேலைத் திட்டங்கள்/கருத்திட்டங்களை செயற்படுத்துகின்றது.

| | | |
|---|---|---|
| 1. சமூக பாதுகாப்பு | - | பயனாளிக் குடும்பங்களுக்கு அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் / நிதி உதவி நன்மைகளை வழங்குதல். கல்வி, சுகாதாரம், சட்டம் போன்ற அடிப்படைச் சேவைகள் மற்றும் வளங்களில் நாடச் செய்வதும் பயனாளிக் குடும்பங்களை பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு தொடர்பு படுத்துவதும் |
| 2. வாழ்வாதார மேம்பாடு | - | தொழிற் திறன் பயிற்சி வாழ்வாதாரத்தின் பொருட்டான தொழில்நுட்ப பயிற்சி, தொழில் / திறன் பயிற்சி வாழ்வாதாரத்தின் பொருட்டான நிதி உதவிகள் சுய தொழில் மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கு சந்தைச் செயற்பாடுகளுடன் தொடர்பு படுத்துதல். |

3. உள சமூக வலுவூட்டல் - பயனாளிக் குடும்பங்களை தங்கி வாழும் மனநிலையில் இருந்து மீட்டெடுத்து தன்னம்பிக்கையோடு முன்னேறுவதற்கான மனநிலையினை விருத்தி செய்தல், சமூக மற்றும் சுகாதார பிரச்சனைகள் தொடர்பான வாழ்க்கைத் திறன் பயிற்சி, உளவளத்துணை ஊடாக உள சமூக சிறப்பினை உருவாக்குவதும், மக்களை உயிர்பூட்டுவதும்.

4. நிதியியல் உள்ளடக்கம் - சேமிப்பு மேம்பாடு, நிதி அறிவு, பயிற்சி மற்றும் நிதியியல் சேவைகளோடு தொடர்புபடுத்துவதன் வழிகளை உருவாக்குதல்.

5. பயிற்சியளிப்பதும் வழிகாட்டலும் - குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரித்தல், தொடர்ச்சியாக பயிற்சியளித்தல், வழிகாட்டல்கள், கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்கள்.

## 06. குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல்

i. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் வலுவூட்டம் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பயனாளிக் குடும்பத்தின் பொருட்டும் குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். குடும்ப அபிவிருத்தித் திட்டத்தின் மாதிரிப் படிவம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்படும்.

ii. தயாரித்த குடும்ப அபிவிருத்தி திட்டத்தின் மூலம் வலுவூட்டப்பட வேண்டிய துறைகளை இனம் காண்பது பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

iii. அதன் பின்னர் இனங்காணப்பட்ட வலுவூட்டப்பட வேண்டிய துறைகளை உள்ளடக்கி பிரிவுக்கு செயற்பாட்டு திட்டம் ஒன்றினை தயாரிப்பது பிரிவு பொறுப்பு உத்தியோத்தரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

iv. இவ்வாறு தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு, இதற்கு முன்னர் வழங்கிய ஆலோசனைகளின் பிரகாரம் சேகரித அடிப்படைத் தகவலகள் இருப்பின் இத்திட்டத்தினை தயாரிப்பதற்கு அத்தகவல்களை பயன்படுத்தி கொள்ளல் வேண்டும்.

## 07. திணைக்களத்தின் மாவட்ட, பிரதேச உத்தியோகத்தர்களுக்கு வேலைத் திட்டத்திற்குரியதாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை அறிமுகப்படுத்துதல்.

**1. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில்)**

- வலுவூட்டும் வேலைத் திட்டம் தொடர்பில் "அஸ்வெசும" மற்றும் இலக்கிடப்பட்ட குறைந்த வருமானம் பெறுவோரை விளக்கமளித்தல்
- திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற "அஸ்வெசும" பயனாளிப் பெயர் பட்டியலின் பிரகாரம் வலுவூட்டும் பொருட்டு பொருத்தமான இலக்குக் குடும்பங்களை இனங்காணுதல்.
- தாபிக்கப்படுகின்ற கிராமியக்குழு உத்தியோகத்தர்களுடன் கூட்டினைந்து சமுர்த்தி நிவாரணம் பெற்ற 12 பயனாளிக் குடும்பங்களை இனம் காணுதல்.
- குடும்ப அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரிப்பதும் ஆவணப்படுத்தி பாதுகாப்பாக வைத்துக் கொள்வதும்.
- பிரிவின் பொருட்டு வலுவூட்டல் செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், மற்றும் சமர்ப்பித்தல்.
- வலுவூட்டலின் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களை தொடர்ச்சியாக விளக்கமளித்தல் (உள சமூக, உளவளத் துணை, நிதியியல் எழுத்தறிவு பிரச்சினைகள் வளங்கல் சந்தர்ப்பங்கள் தொடர்பான ஆய்வு)
- உதவிச் சேவைகள் மற்றும் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு.
- வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதும் நடைமுறைப்படுத்துவதும்.
- கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் கண்காணிப்பு மற்றும் பின் பணி ஆய்வுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை செய்தல்.
- பிரிவில் வலுவூட்டப்படுகின்ற பயனாளிகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தினை அறிக்கையிடல்

**2. சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள்.**

- கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வலுவூட்டப்படுகின்ற குடும்பங்களை இனம் காண்பதற்கு வழிகாட்டுதல், விளக்கமளித்தல் மற்றும் ஒத்துழைப்பினை வழங்குதல்.
- குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கும் பொருட்டு வசதிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- இனங்கண்ட இலக்கிடப்பட்ட குடும்பங்களை விளக்கமளித்தல் பயிற்சியளிக்கும் பொருட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- இனம் காணப்பட்ட குடும்பங்களுக்குரிய தரவுகளை கணினி வளலயமைப்பில் பதிவேற்றுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- வாழ்வாதார அபிவிருத்திக்குரிய கருத்திட்டங்களின் பொருட்டு நிதி, பயிற்சிகள், தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் .
- நேரொத்த மற்றும் பிற நிறுவனங்களூடாக வழங்கப்படுகின்ற சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்
- பிரதேச மட்டத்தில் பயனாளிகள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் முன்னேற்றத்தினையும் தகவல்களையும் அறிக்கையிடல்.
- வங்கி வலய மட்டத்தில் பின் பணி ஆய்வினை மேற்கொள்ளல் மற்றும் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்.

3. **தலைமையக/வங்கிச் சங்க முகாமையாளர்கள்**

- களப்பணியில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வேலைத் திட்டம் தொடர்பில் வழிகாட்டுவதும் ஆலோசனைகளை வழங்குவதும்
- பிரதேச செயலகப் பிரிவின் இலக்குக் குடும்பங்களின் திட்டத்தினை தயாரிப்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய இலக்குகளை தயாரித்து வழங்குவதும்.
- பயனாளிகளின் தேவைகளின் பொருட்டு மனித, பௌதீக மற்றும் நிதி வளங்களை இனம் காண்பதும் அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும்.
- குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் பொருட்டு ஒத்துழைப்பினை வழங்குதல்.
- இனம் காணப்பட்ட பயனாளி குடும்பங்களின் பொருட்டு பொருத்தமான வருமான மீட்டல் கருத்திட்டங்களுக்கு பயனாளிகளை ஈடுபடுத்த செய்வதற்கு வழிகாட்டல்களை வழங்குதல்.
- பிரதேச செயலாளரால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை களப்பணியில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல்.
- பின்பணியாய்வினை மேற்கொள்ளல் மற்றும் முன்னேற்றத்தினை ஆராய்தல்.
- பிரதேச மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் கண்காணிப்பு மற்றும் பின் பணி ஆய்வு நடவடிக்கைகளுக்காக தகவல்களையும் அறிக்கைகளையும் வழங்குதல்.
- தலைமையக/சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் இணைக்கப்பட்டுள்ள பிற பணியாளர் குழாமினருக்கு இந்த வேலைத் திட்டத்திற்குரிய கடமைகளை ஒப்படைப்பதும் உத்தியோகத்தர்களை நெறிப்படுத்துவதும்.

4. **கருத்திட்ட முகாமையாளர்**

- பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பயிற்சியளித்தல் மற்றும் விழிப்பூட்டல் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்வதும் நடாத்துவதும்.
- வருமானமீட்டல் கருத்திட்டங்களை இனங்காணுதல், கருத்திட்ட அறிக்கையினைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்குரிய நிதி மற்றும் உதவிச் சேவைகளை வழங்குதல்.
- தொழில்நுட்பம்/ முகாமைத்துவம்/ சந்தைப்படுத்தல் போன்ற துறைகளின் கீழ் பயிற்சி வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்வதும் நடாத்துவதும்.
- உதவிச் சேவை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு.
- குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினைத் தயாரிக்கும் பொருட்டு வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பினையும் வழங்குதல்.
- பிரதேச செயலக பிரிவின் பொருட்டு வலுவூட்டல் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- பின் பணி ஆய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள்.
- தகவல்களை தயாரிப்பதும் அறிக்கைகளை முன் வைப்பதும்.

5. **மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்.**

- பிரதேச மட்டத்தில் தயாரித்த குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினை ஒன்றிணைத்து வலுவூட்டும் மாவட்ட செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரித்தல்.
- கிராமிய மற்றும் பிரதேச மட்டம் வரை வசதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றினைத்தயாரித்தல்
- இனம் கண்ட விசேட கருத்திட்டங்களை பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- வேலைத்திட்டத்தினை கண்காணித்தல், பின் பணி ஆய்வினை மேற்கொள்ளல், முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்ளல்.
- வலுவூட்டும் பிரதேச அபிவிருத்தி திட்டங்களில் உள்ளடங்கியுள்ள கருத்திட்டங்களை குறித்த நேரொத்த நிறுவனத்திற்கு சமர்ப்பிப்பதும் நேரொத்த நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுத்தாத கருத்திட்டங்களின் பொருட்டு பிற நிதியங்களை பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு வேலை திட்டம் ஒன்றினை செயற்படுத்துதல்.
- திறைசேரி ஒதுக்கீட்டு நிதிய முகாமைத்துவம்.

08. நேரொத்த அரசாங்க நிறுவனங்கள்/திணைக்களங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகளை இவ்வேலைத் திட்டத்தின் இலக்கு குடும்பங்களுக்கு பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தொகுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதையும் அறிய தருகின்றேன்.

09. **கண்காணிப்பு, பின் பணி ஆய்வு மற்றும் முன்னேற்ற மீளாய்வு.**

கீழுள்ள கட்டங்கள்/மட்டங்களின் கீழ் பின் பணி ஆய்வுகள் மற்றும் வேலைத் திட்டத்தினை மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

| மட்டம் | பொறுப்பு | காலம் |
|---|---|---|
| தேசிய மட்டம் - i | விடயப் பொறுப்பு அமைச்சர்/ அமைச்சின் செயலாளர்/ சமுர்த்தி பணிப்பாளர் தலைமை அதிபதி/ திணைக்களத்தின் பிரிவுத் தலைவர்கள் | காலாண்டு |
| தேசிய மட்டம் - ii | அமைச்சின் செயலாளர்/ சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமை அதிபதி/ பிரிவுத் தலைவர்கள் | மாதாந்தம் |
| மாவட்ட மட்டம் | மாவட்ட செயலாளர்/ மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் | மாதாந்தம் |
| பிரதேச மட்டம் | பிரதேச செயலாளர்/ வங்கிச் சங்க முகாமையாளர்/ தலைமையக முகாமையாளர்/ கருத்திட்ட முகாமையாளர் | மாதாந்தம் |
| சமுர்த்தி வங்கி வலய வட்டம் | வங்கி முகாமையாளர்/ சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (கள) /அபிவிருத்தி உத்தியோகத்தர் | வாராந்தம் |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | வாராந்தம் |

பிரதேச / வங்கி வலய / கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நடாத்தப்படும் முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகளின் பொருட்டு பிரதேச சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் / வங்கிச் சங்க நிறைவேற்றுக் குழுத் தலைவர் / வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் / கிராமிய சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் போன்ற தன்னார்வ உத்தியோகத்தர்களின் சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அந்தந்த கட்ட மட்டங்களில் பொறுப்புகளை வகிக்கும் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

10. **வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு கடன் வசதிகளை வழங்குதல்.**

வலுவூட்டும் பொருட்டு இனம் காணப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வருமானமீட்டல் நடவடிக்கைகளின் பொருட்டு வட்டி இல்லாத மற்றும் குறைந்த வட்டிக் கடன்களின் கீழ் விசேட கடன் திட்டம் ஒன்றினை சமுர்த்தி வங்கியின் ஊடாக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

11. **எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்.**

வலுவூட்டும் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக கீழுள்ள பெறுபேறுகளை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

- வலுவூட்டப்படுகின்ற குடும்பங்களின் மாதாந்த வருமான மட்டமானது ரூபா 40,000/= ஆயிரம் வரை அதிகரித்தல்,
- குடும்பத்தின் மாதாந்த சேமிப்பு 10% ஆல் அதிகரித்திருத்தல்,
- வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் போஷாக்கின்மையினை குறைத்தல்,
- பயனாளி குடும்பங்களின் உணவு பாதுகாப்பினை அதிகரித்தல்,
- வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உடல் உள தேர்ச்சி அதிகரித்தல்,
- பயனாளிகளின் பங்கேற்பின் அடிப்படையில் ஓய்வூதியத் திட்டம் ஒன்றுக்கு பங்களிப்புச் செய்தல்,
- சமூக மற்றும் சுகாதார பிரச்சனைகள் தொடர்பில் பயனாளிகளின் வாழ்க்கை தேர்ச்சி விருத்தியடைதல்,
- பயனாளிகளுக்கு கடன் மற்றும் நிதி சேவைகளில் ஈடுபடுவதற்குள்ள வழிகள் அதிகரித்தல்
- நிரந்தரமான குறிக்கோள் உள்ள குடும்ப அபிவிருத்தி திட்டத்துடனான குடும்பம் ஒன்றினை உருவாக்குதல்
- நிவாரணத்தில் தங்கி வாழும் மனநிலையில் இருந்து அகன்று சுய முயற்சியுடன் முன்னேறும் மனநிலையுடைய குடும்பம் ஒன்றினை உருவாக்குதல்,
- வலுவூட்டும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட குடும்ப அலகினை முழுமையாக வலுவூட்டி குறிப்பிட்ட கால வரையறையின் இறுதியில் தன்னார்வத்துடன் நிவாரண உதவி வேலைத் திட்டத்திலிருந்து மீட்டிக் கொள்ளப்பட்ட குடும்ப அலகு ஒன்றினை உருவாக்குதல்

12. இந்த வலுவூட்டல் வேலை திட்டத்தில் புதிய கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளின் அடிப்படையில் காலத்திற்கேற்ற மாற்றங்களுக்கு வாய்ப்புக்கள் உள்ளன ஆகையினால் அது தொடர்பான ஆலோசனைகளையும் திரும்பத் திரும்ப உங்களுக்கு வழங்க வேண்டியேற்படும் என்பதனையும் வினயமுடன் அரியத்தருகின்றேன்.

13. சமூக வலுவூட்டலின் பொருட்டு இதற்கு முன்னரும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனைகள் செல்லுபடி யற்றதாக்கப்படுவதாகவும் புதிய வேலை திட்டத்தின் பொருட்டு இந்த ஆலோசனைகளை செல்லுபடியாக்கிக் கொள்ளுமாறும் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியத்தருகின்றேன்.